பதிவஞ்சல் ஒப்புதலுடன்

**திருவண்ணாமலை மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்:- மரு. கேப்டன் K.M. ஏழுமலை, MS. (GS),.**

**ந.க.எண். 2049/நி2/2022** **நாள் 12.09.2022**

பொருள்: நிர்வாகம் – திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அரசு மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு. ர. முத்து, என்பவரின்– தற்காலிக பணிகள் 09.09.2020 முற்பகல், பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர் தமிழ்நாடு தேர்வாணையக்குழு அவர்களின் கடிதம் எண்.2383/PSD-12/2020, நாள்.21.07.2020.
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை–6, அவர்களின் கடிதம் ந.க.எண்.31495/நி2/2/2020, நாள்.25.08.2020
3. திருவண்ணாமலை, நலப்பணிகள் இணை இயக்குநர் அவர்களின் பணிநியமண ஆணை ந.க.எண்.4785/E2/2020-1, நாள்.02.09.2020

........

பார்வை 1–இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் மூலம் பார்வை 2 –இல் காணும் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை–06 அவர்களின் பணிஒதுக்கீட்டு ஆணை மற்றும் பார்வை 3–இல் காணும் இவ்வலுவலக பணிநியமன ஆணையின்படி திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அரசு மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 7(5) கீழ் பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்காணும் இளநிலை உதவியாளரின் தற்காலிக பணிகள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் பதவி மற்றும் பணி புரியுமிடம் | தற்காலிக இளநிலை உதவியாளராக பணியில் இணைந்த நாள் | பணிவரன் முறை செய்யப்பட்ட நாள். |
|---|---|---|---|
| 1 | திரு. ர. முத்து<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மருத்துவமனை, கலசப்பாக்கம்.<br>திருவண்ணாமலை மாவட்டம் | 09.09.2020 முற்பகல் | 09.09.2020 முற்பகல் |

இவர் தமது தற்காலிக பணிகள் வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இப்பருவத்தை இவர் தமது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் நிறைவு செய்திட வேண்டும் என் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இப்பணியாளர் தமிழ்நாடு துறை அலகு தேர்வான TamilNadu Medical code மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை தமது இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது

இந்த பணி வரன்முறை ஆணையானது Combined Civil Service Examination Group IV 2018–2019, மற்றும் 2019–2020–ம் ஆண்டின் தேர்வு செய்யப்பட்டவர் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் / மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

நலப்பணிகள் இணை இயக்குநர், (பொ)
திருவண்ணாமலை.

பெறுநர்

திரு. ர. முத்து
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவமனை, கலசப்பாக்கம்.
திருவண்ணாமலை மாவட்டம் – உரிய வழியாக

நகல் மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, கலசப்பாக்கம்

நகல்:- அலுவலக ஆணை புத்தகம் / பணிப்பதிவேடு / இருப்பு கோப்பு / தனி .

SCS MEDICAL OFFICER
GOVT. HOSPITAL
KALASAPAKKAM